உ

சிவாப்யாம் நம:

தேவியின் தத்துவம்

தர்மக்ஞ, சிரோமணி, வித்யாவாசஸ்பதி,
மாயூரம்
M. ராமநாத தீக்ஷிதர்
எழுதியது



பிரசுரம்

ஸ்ரீசங்கர பக்த ஜன சபா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு
மேலமாம்பலம், சென்னை-600033

1976

விலை 40 காசுகள்

உ

சிவாப்யாம் நம:

தேவியின் தத்துவம்

தர்மக்ஞ, சிரோமணி, வித்யாவாசஸ்பதி, மாயூரம்

M. ராமநாத தீக்ஷிதர்

எழுதியது

பதிப்பாசிரியர்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

சிவபுராண ஞானபூஜகர்

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு

மேலமாம்பலம் சென்னை-600033

முதல் பதிப்பு] 1976 [விலை 40 காசுகள்

உ
சிவாப்யாம் நம :

பதிப்பாசிரியர் பணிவுரை

ஸ்ரீ ராஜராஜேச்வரி, புவனேச்வரி, லலிதாத்ரிபுர சுந்தரி என்று பலவிதமாக அழைக்கப்படுவது பராசக்தி என்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த பராசக்தியே ஞானசக்தி, இச்சாசக்தி, க்ரியா சக்திகளைக் கொண்டு பலவிதமாகத் தோன்றி சத்ருபயத்தை நீக்கி அபயம் அளிக்கிறாள். பராசக்தியின் அதி அற்புதமான லீலைகளையும் தத்துவங்களையும் மிகவிரிவாகப் பிரகாசப்படுத்தும் மஹா புராணமான தேவீபாகவதத்தின் ஆரம்பத்தில் "ஸர்வ சைதன்ய ரூபாம் தாம் ஆத்யாம் வித்யாம்ச தீமஹி| புத்திம் யா ந: ப்ரசோதயாத் ||" அதாவது எல்லாப் பிராணிகளின் ஹ்ருதயத்தில் அறிவு வடிவமாய்ப் பிரகாசித்துக் கொண்டு அவரவரின் புத்தி விருத்தியையும் (எண்ணங்களையும்) ஏவுகிறாள் என்று கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமத் ஜகத்குரு ஆதிசங்கர பகவத்பாதர்கள் "ஜகன்மாதர்மாத :' அதாவது உலகத்திற்குத் தாய் என்று கூறுகிறார். ஆதலால் தாயாக இருந்து கொண்டு ஸ்தூல சரீரத்தையும், அறிவு வடிவமாக இருந்து கொண்டு சூக்ஷ்ம சரீரத்தையும் பராசக்தியானவள் காத்து அருள்புரிகிறாள் என்பது விளங்குகிறது. ஆகையினால் தேசத்தையும் உடலையும் உயிரையும் காக்கும் தெய்வமான பராசக்தியை பாரதத்தில் பிறந்த ஒவ்வொருவரும் வணங்க வேண்டும்.

தேவீபாகவதம், தேவீமகாத்ம்யம் போன்ற புராணங்களிலும், மற்றும் பல நூல்களிலும் ஸ்ரீ தேவியின் பெருமைகளும், தத்துவமும் விஸ்தாரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பலநூல்களில் பரந்து உள்ள தத்துவத்தை ஒன்று திரட்டி பாலினின்றும் வெண்ணெய் எடுத்துக் கொடுப்பது போல மிகவும் ஸாரமாக தேவியின் தத்துவம் என்ற இந்த அரிய நூலை தர்மக்ஞ, சிரோமணி, வித்யா வாசஸ்பதி பிரம்மஸ்ரீ மாயூரம் ராமநாத தீக்ஷிதர் அவர்கள் எழுதி ஆஸ்திகர்களுக்கு ஒரு பேருபகாரத்தைச் செய்துள்ளார்கள். உருவில் சிறியதாக இருப்பினும் பெரியதொரு தத்துவத்தைக் கூறும் நூலாக இது இருப்பதால் இதனை ஆஸ்திக மெய்யன்பர்கள் பெற்று ஒரு முறைக்குப் பலமுறை படித்து தேவியின் பெருமைகளை உணர்தல் வேண்டும்.

இந்த பெரிய லோகோபகாரத்தைச் செய்தருளிய பிரம்மஸ்ரீ மாயூரம் தீக்ஷிதர் அவர்கள் நூற்றிநான்கு கிரந்தங்கள் செய்த அவதார புருஷரான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர்களின் வம்சத்தில் பன்னிரண்டாவது தலைமுறையில் தோன்றியவர்கள். அந்த வம்சத்துக்கு ஒரு பூஷணம் போன்று தோன்றியவர்கள். அதே வம்ச திலகரான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் போன்று தேவி வழிபாட்டில் மிகவும் ஈடுபட்டு இடைவிடாது தேவீபாகவதப் பிரவசனம் செய்து பக்தர்களை தேவியின் அருள் கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாக ஆக்கும் அருள் நெறியில் முயன்று சேவை செய்து வருபவர்கள். வேதம், வேதாந்தம், இதிஹாஸ புராணம், தர்ம சாஸ்திரங்கள் ஆகிய எல்லாத் துறைகளிலும் வல்லுனராக இருப்பதால் எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் திறம்பட எழுதவும் பேசவும் செய்கிறார்கள். ஸ்ரீமத் ஜகத்குருவின் பேரருளுக்கும் பாத்திரமானவர்கள். அவர்கள் நமக்கு இந்த அரிய நூலைத் தந்து உதவியதற்கு நமது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். அவர்கள் தேவியின் திருவருளால் திடகாத்திரர்களாகப்பல்லாண்டுகள் வாழ்ந்து தேவியின் திவ்யமான பெருமைகளைப் பிரசாரம் செய்து

கொண்டும் இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

எல்லோரும் இந்த நூலை வாங்கிப்படிக்க வேண்டும் என்று கோருகிறோம்.

இங்ஙனம்
சிவபுராணஞான பூஜகர்
ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
பதிப்பாசிரியர்.

சென்னை-33
21-7-1976

உ

சிவாப்யாம் நம:

தேவியின் தத்துவம்

தர்மக்ஞ, சிரோமணி, வித்யாவாசஸ்பதி, மாயூரம்

M. ராமநாத தீக்ஷிதர் எழுதியது

பாரததேசம் தோன்றியது முதல் தொடர்ந்து வருவது இந்து (ஸநாதன) மதம். இங்கு எவ்வளவு மதங்கள் தோன்றினாலும் அம்மதங்களுக்கு ஜனங்களைக் கொடுத்து அவையனைவற்றையும் வளர்த்து வருவதும் இந்துமதமே தான். தோன்றிய மற்றையவை மறைந்தாலும் என்றும் மறையாமல் விளங்குவது இந்துமதம்.

இந்துக்களனைவரும் ஒரு முகமாய்ப் போற்றும் தெய்வம் ஒன்று. அதுவே பாரதமாதா என்று கூறப்படுகிறது பாரதமாதா என்றால் பாரததேசத்திற்குத்தாய் என்று பொருள். தாய் மக்களைக் காப்பது போல் தென் கோடியில் குமரி முனையில் கன்யகாபரமேச்வரியாயும் வடகோடியான இமயத்தில் ஹைமவதியாயும் கிழக்கடற்கரையில் வங்க தேசத்தில் காளியாயும், மேல் கடற்கரையில் மஹாராஷ்ட்ர தேசம் பம்பாயில் லக்ஷ்மிதேவியாயும் இருந்து நம்மைக் காப்பாற்றி வருகிறாள் பராசக்தி. அவளையே புவனேச்வரீ, ராஜராஜேச்வரீ, ஆதிபராசக்தி, ஜகன்மாதா, என்றெல்லாம் அழைக்கின்றோம். அவளே ஒவ்வொரு சிறிய கிராமங்களிலும் மஹாமாயா, மாரியம்மன், த்ரௌபதியம்மன், காத்தாயி, பேச்சாயி, எல்லையம்மன், என்பன போன்ற பெயரால் கிராம தேவதையாய்க் கொண்டாடப்படுகிறாள். இவ்விதம் மஹிமை வாய்ந்த பராசக்தியின் அம்சங்களே மற்றுமுள்ளதேவர்கள். ஒவ்வொரு தேவரிடமும் ஒவ்வொரு

சக்தி உள்ளது. ஒரு தேவரிடம் உள்ள சக்தி மற்ற தேவரிடமில்லை. எல்லாவித சக்திகளும் அம்பாளிடம் உள்ளன. அதனுலேயே அவளைப் பராசக்தி என்றழைக்கின்ருேம்.

இவ்விதமுள்ள பராசக்தியையும் மற்றுமுள்ள தேவர்களையும் காண்பிப்பது வேதம். வேதயதி—காண்பிக்கின்றது, என்பதனுல் வேதம் எனப் பெயர் வந்தது. மேலும் வாழ்க்கைக் கடலில் விழுந்து வழி தெரியாமல் தவிப்பவருக்கு வழிகாட்டுவது வேதம். வேதம் அனுதியானது. அனுதியான ஸநாதனமான நமது மதத்திற்குச் சிறப்பைக் கொடுப்பது வேதம். நமது மதத்திலுள்ள யாவருக்கும் அவரவருக்குத் தகுந்தபடி தர்மங்களை விதிப்பது வேதம். செய்யக்கூடாது என்றும் செய்தால் பல துன்பங்கள் ஏற்படுமென்றும் அதர்மங்களை அறிவிப்பதும் வேதமே. வேதத்தின் ஸாரமாயுள்ளது வேதாந்தம். அதாவது உபநிஷத். வேதாந்தத்தில் பரமலக்ஷியமாய் விளங்குவது ப்ரம்ம வித்யை. அது ப்ரம்மத்தைப் பற்றிய அறிவு. ப்ரம்மம் என்பது காலத்திஞலும் தேசத்திஞலும் வஸ்துவிஞலும் சிறுமைப்படுத்த முடியாதது. அதாவது எக்காலத்திலும் எவ்விடத்திலும் எப்பொருளாயும் உள்ளது என்பது தாத்பர்யம். மேலும் அறிவுவடிவாயும் ஆனந்த ரூபமாயுமுள்ளது. அதுவே நான் என்றறிவது தான் ப்ரம்மவித்யை. இதை ப்ரம்மஸாக்ஷாத்காரம் என்று கூறுவர். இதுவே மோக்ஷத்திற்குக் காரணம் என்று வேதம் சாஸ்திரங்கள் ஆகியவை கூறுகின்றன.

ப்ரம்ம வித்யைக்கு மிக அந்தரங்கமாயுள்ளது ஸ்ரீவித்யை. ப்ரம்மவித்யைக்கு விஷயமாயுள்ளது நிர்குண ப்ரம்மம். அது ஜாதி குணம் க்ரியை இல்லாமல் கூடஸ்தமாயுள்ளது.

निर्गुणम्, निष्क्रियं शान्तम् , कूटस्थमचलं ध्रुवम् ,

என்று உபநிஷத் கூறுகிறது. அந்த ப்ரம்மத்தின் சக்தியே மாயை. அது அந்தர்முகமாக விளங்கும் பொழுது வித்யை என்று பெயர். அந்த சக்தியுடன் கூடிய ப்ரம்மம் துரீய மெனப்படும். பஹிர் முகமாய் விளங்கும் பொழுது மாயை என்றும் அவித்யை என்றும் கூறுகிறோம். அதன் ஸம்பந்தத்தினால் ஸமஷ்டியில் அவ்யாக்ருதன் ஈசுவரன் என்றும் வியஷ்டியில் ப்ராக்ஞன் என்றும் ப்ரம்மத்தைக் கூறுகிறோம். இது காரணாவஸ்தை. பிறகு ஸூக்ஷ்மாவஸ்தையில் ஸமஷ்டியில் ஹிரண்யகர்பன் என்றும் வியஷ்டியில் தைஜஸன் என்றும் ஸ்தூலாவஸ்தையில் ஸமஷ்டியில் விராட் என்றும் வியஷ்டியில் விச்வன் என்றும் கூறுகிறோம்—ஸமஷ்டி ஈச்வரதத்வம் வியஷ்டி ஜீவதத்வம். இப்பிரிவு மாயையினாலேயே ஏற்படுகிறது. மேலும் இந்த மாயைக்கு ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் உள்ளன.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वी:प्रजा: सृजमानां सरूपा: ।

என்று முக்குணமாயையைப்பற்றி உபநிடதம் கூறுகிறது

இந்த குணங்களைக் கொண்டு ஸத்வப்ரதானமான மாயா ஸம்பந்தத்தினால் விஷ்ணு, ரஜ:ப்ரதானமாயா ஸம்பந்தத்தினால் பிரம்மா, தம: ப்ரதானமாயா ஸம்பந்தத்தினால் ருத்ரன் என்றும், குணங்கள் ஸமப்ரதானமாயுள்ள மாயாஸம்பந்தத்தினால் ஸகுணமாக துரீயம் என்றும் ப்ரம்மம் விளங்குகிறது.

இதை கனகதாராஸ்தவத்தில் ஆசார்யாள் விளக்குகிறார்கள்

"गीर्देवतेति गरुडध्वजसुन्दरीति शाकंभरीति शशिशेखरवल्लभेति । सृष्टिस्थितिप्रलयकेलिषु संस्थितायै तस्यै नम: त्रिभुवनैकगुरोस्तरूण्यै" ॥

சைதன்யத்தில் ஸம்பந்தித்த மாயை ஸமப்ரதான குண முள்ளதாக இருக்கும் பொழுது பராசக்தி, புவனேச்வரி, த்ரிபுரஸுந்தரீ, மஹாமாயா, ஸ்ரீமாதா, என்று கூறப்படு கிறது. சைதன்ய ஸம்பந்தத்தினுல் ஜடமான மாயை உலகத்தையுண்டு பண்ணுகிறது. அதனுல் ஸ்ரீமாதா—ஜகன்மாதா—உலகத்தாய் என்று அழைக்கின்ருேம். இந்த சக்தியுள்ள ப்ரம்மத்தை ஜகத்காரணம், அபின்ன நிமித் தோபாதானம் என்று கூறுகிருேம். குடத்திற்கு நிமித்த காரணம் குயவன், உபாதான காரணம் மண். உலகத் திற்கு நிமித்த காரணம் ப்ரம்மம்; உபாதான காரணம் மாயை. ப்ரம்மத்தை விட்டு மாயையைத் தனியாய்க் காண முடியாது. என்றும் ப்ரம்மத்துடன் சேர்ந்து அதன் சக்தி யாய் விளங்குகிறது. ஆகையினுல் நிமித்தம் வேறு உபாதானம் வேறு என்றில்லாமல் ஒன்ருக இருப்பதால் அபின்ன நிமித்தோபாதானம் என்று கூறப்பெறுகிறது.

இந்த சக்தி ப்ரம்மத்தினிடமிருப்பதால் ப்ரம்மம் அத்வி தீயம், இரண்டற்றது, என்ற ஸித்தாந்தத்திற்கு பங்க மேற்படாது. நெருப்பில் சூடு, சூரியனிடம் கிரணங்கள், சந்திரனிடம் குளிர்ச்சியான காந்தி, ஜலத்தில் சைத்யம் இருப்பதால் வெவ்வேருகக் கூறுவதில்லை. அக்னி, சூர்யன், சந்திரன், ஜலம் என்றே ஒருமையாகத்தான் கூறுகின்ருேம். அதுபோல் சக்திபல இருந்தாலும் ப்ரம்மம் ஒன்றே.

"परास्य शक्तिर्विविधैव श्रूयते"

என்று பலவிதமான சக்திகளிருப்பதாக கூறுகிறது. ஒரு மனிதனிடம் சரீர பலத்தால் பலகார்யம் செய்யும் திறமை யும் புத்தி பலத்தால் பல விஷயங்களைக்கிரஹிக்கும் திறமை யுமிருப்பதால் மனிதன் பல ஆகமாட்டான். அவன் ஒரு வனே. அதுபோல் பல சக்தியுள்ளதாயினும் ப்ரம்மம் ஒன்றே. அக்னியில் ஹோமம் செய்தாலும் ஜ்வாலையில் ஹோமம் செய்தாலும் பயனையடைகிருன். அதுபோல்

ஸகுண பிரம்மத்தை உபாஸித்தாலும் ஸகுண சக்தியான தேவியை உபாஸித்தாலும் உபாஸந பயனையடைகிறுன் ஆனுல் ஜ்வாலையற்ற அக்னியில் ஹோமம் செய்வது போல் சக்தியற்ற ப்ரம்மோபாஸனம் பயனற்றதாகும். அதனுல் உபாஸனத்தை விதிக்கும் உபநிடதம்

உமா ஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும்
த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம் |
த்யாத்வா முனிர்கச்சதி பூதயோனிம்
ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ||

என்றும், ஸ்ரீ பகவத்பாதாசார்யாள்

"சிவச்சக்த்யாயுக்தோ யதிபவதி சக்த: ப்ரபவிதும்" என்றும் கூறுகிருர்கள்.

குண ஸாம்யாவஸ்த மாயா சக்தி விசிஷ்ட ப்ரம்மோபாஸனம் என்பது சக்தி உபாஸநம் என்பதிலேயே பர்யவஸானத்தை (முடிவை)யடையும். விசிஷ்ட விதிகளெல்லாம் விசேஷணத்திலேயே பர்யவஸானத்தையடையுமென்று மீமாம்ஸாந்யாயம் கூறுகிருர்கள். ஸத்வம் முதலிய குணங்களில் ஒவ்வொரு குணம் மட்டும் ப்ரதானமாய்க் கொண்ட மாயா விசிஷ்ட ப்ரம்மா முதலியவர்களின் உபாஸனத்தை விட முக்குணங்களில் ஸாம்யாவஸ்தையுள்ள மாயா விசிஷ்ட ப்ரம்மோபாஸனம் சிறந்தது. உபநிஷத்துக்களில் ஸகுணேபாஸனம் என்ருல் கீழ்ச்சொல்லிய உபாஸனமே கருதப்படுகிறது. பிரம்மா, விஷ்ணு, சிவ உபாஸனங்கள் பெரும்பாலும் புராணங்களிலே உள்ளது. சுத்தப்ரம்மத்தின் முதல்மாறுதலாதலால் இதுவே அந்தரங்கம் பிரம்ம வித்யைக்கு. இதுவே துரீய ப்ரம்மம். "சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே ஸஆத்மா ஸவிக்ஞேய:" என்று அதுவே அறியத்தகுந்ததென்று கூறுகிறது. இதிலிருந்து காரணம், ஸூக்ஷ்மம், ஸ்தூலம் என்று பல மாறுதல் ஏற்படுகிறது. ஆதலால் கீழ்ச் சொல்லியபடி

பராசக்தியின் உபாஸனமே பிரம்மவித்யைக்கு அந்தரங்கம் அதனுலேயே அம்பாளுக்கு பிரம்ம வித்யை என்று பெயர் ப்ரஸித்தமாயுள்ளது.

பிரம்மவித்யையையடைவதற்கு அம்பாள் உபாஸநம் மிக அவச்யமானது. மனிதப் பிறவியையடைந்த ஒவ்வொருவனும் அம்பாளை உபாஸிக்கவேண்டும், இல்லாவிட்டால் ஆத்மஹத்தி பண்ணிய தோஷ மேற்படுகிறது என்று ஸூதஸம்ஹிதை கூறுகிறது.

अतस्संसारनाशाय साक्षिणी मात्मरूपिणीम् ।
आराधयेत्परां शक्ति प्रपंचोल्लास वर्जिताम् ॥

मानुष्यं जन्म लब्ध्वाऽपि भुवि ब्रह्मादि दुर्लभम् ।
नोपास्ते श्रीं श्रियोविद्यां यस्ततोन्यः क आत्महा ॥

उपासते येपरमां सर्व लोकैक मातरं ।
तेऽभीष्टं सकलंयान्ति विद्यां मुक्तिप्रदायिनिम् ॥

அம்பாளை உபாஸிப்பவன் விரும்பியபயனையடைகிருன் என்றும் கூறுகிறது.

இங்கு பராசக்தியை மாயை என்று கூறுவதால் மாயை ஜடமானதால் அதன் உபாஸனம் எவ்விதம் பயனளிக்கும் என்று உண்மையை உணராத சிலர் சங்கையையடைகின்கின்றனர், அவர்களுக்கு சமாதானம் எளிய முறையில் ஸூதஸம்ஹிதை கூறுகிறது. மாயை சைதன்யஸம்பந்தமில்லாமல் தனியாய் ஒருபொழுதுமிராது. சுத்தசைதன்யமே இருப்பிடம். அதுவே விஷயம்

आश्रयत्वविषयत्व भागिनी निर्विभागचितिरेवकेवला ।
पूर्वसिद्धतमसोहि पश्चिमोनाश्रयो भवतिनापि गोचरः ॥

என்று ஸம்க்ஷேபகசாரீராசார்யர் கூறுகிருர்.

சைதன்யத்தில் ஸம்பந்தித்த மாயாசக்தியில் சைதன்யம் பிரதிபலிக்கின்றது. அதுவே சைதன்யத்தோடு வேறு படாததாக இருக்கும்பொழுது உபாஸிக்கப்படுகிறது. கேவலம் மாயையல்ல என்பது நன்கு உணரவேண்டும் என ஸூதஸம்ஹிதை கூறுகிறது.

चिन्मात्राश्रयमायाया श्शक्तयाकारे द्विजोत्तमाः ।
अनुप्रविष्टा या संवित् निर्विकल्पा स्वयंप्रभा ॥

सदाकारा सदानन्दा संसारोच्छेदकारिणी ।
साशिवा परमादेवी शिवाभिन्ना शिवंकरी ॥

சிவனுடன் அபின்னமாக இருந்து கொண்டு சிவம் மங்களத்தைக் கொடுக்கிறுள் என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

மேலும் காலோத்தரம் என்ற கிரந்தத்தில் தேவி பரமசிவனை நோக்கிக் கேட்கிறுள்

भगवन् देवदवेश मिथ्यामायेतिविश्रुता ।
तस्याः कथमुपास्यत्वं भवेन्मुक्तावनन्वयात् ॥

श्रद्धा न जायते क्वापि मिथ्या वस्तुनि कुत्रचित् ।
देव्या उपासनाचेयं श्रिता मायाश्रिताप्रभो ॥
संशयांश्छिन्दि देवेश रहस्यं वद मे प्रभो ।

शिव उवाच—

नाहं सुमुखि मायाया उपास्यत्वं ब्रुवे क्वचित ।
मायाधिष्ठान चैतन्यं उपास्यत्वेनकीर्तितम् ॥

मायाशक्त्यादि शब्दाश्च विशिष्टस्यैव लक्षकाः ।
तस्मान्मायादि शब्दैस्तु ब्रह्मैवोपास्यमुच्यते ॥

பார்வதி "ஓ தேவ! மாயை பொய்-மித்யை, அதை உபாஸிப்பது எவ்விதம் பொருந்தும்? பொய்யான வஸ்துவில் யாருக்காவது ச்ரத்தையுண்டாகுமா? ஆகையினுல் மாயையான தேவீஉபாஸனம் எப்படிபயனளிக்கும்? ஸந்தேஹத்தைப் போக்க வேண்டும் என்று வினவினுள்.

ஏ பார்வதி! நான் மாயையை உபாஸிக்கச் சொல்லவில்லை. அதன் அதிஷ்டான சைதன்யத்தை உபாஸிக்கச் சொன்னேன், மாயா, சக்தி, முதலான சப்தங்கள் மாயையுடன் கூடிய ப்ரம்மத்தைத தெரிவிக்கின்றன, ஆகையினுல் சக்தி உபாஸனம் ப்ரம்மோபாஸனமாகவே ஆகும் என்று விடை கூறுகிருர் பரமசிவன். சக்தியுபாஸனத்திலும், ஞானசக்திப்ரதானமான புவனேச்வரீ, லலிதாத்ரிபுரசுந்தரீ, மஹாலக்ஷ்மீ, ஸரஸ்வதீ முதலான உபாஸனம் சாந்தியையும் அறிவையும் சுகத்தையும் கொடுக்கும். க்ரியா சக்திப்ரதானமான துர்கா-சாமுண்டா, காளீ, சாகம்பரீ முதலான உபாஸனம், கார்யஸித்தியையும், ஆரோக்யத்தையும், எதிரியிடம் வெற்றியையும் அளிக்கும். எந்தவிதமாஞலும் குடும்பவாழ்க்கையில் உள்ள ஒவ்வொருவரும் அம்பாள் உபாஸனத்தை முறையுடன் செய்ய வேண்டும் குடும்ப நலத்திற்காக. சில தேவதை சிற்றின்பத்தைக் கொடுக்கும்' சில தேவதை பேரின்பத்தைக் கொடுக்கும். அம்பாளே உபாஸித்தால் சிற்றின்பம் பேரின்பம் இரண்டையும் அடையலாம். அம்பாளுக்கு ராஜராஜேச்வரி என்று பெயர். அரசர்களையும் காப்பாற்றுகிருள். அரசாங்கத்திலும் பூஜிக்கப்படுகிருள் ராஜ்யலக்ஷ்மி என்பதாக.

இக்ஷ்வாகுவம்சத்தில் மாந்தாதா என்ற அரசன் தனது அரசாக்ஷி காலத்தில் ஆயிரத்தெட்டு இடத்தில் கோயிலை

அம்பாளுக்கு கட்டி கும்பாபிஷேகம் செய்தானென்று தேவீபாகவதம் கூறுகிறது.

अष्टोत्तरसहस्रंतु प्रासादा येननिर्मिता: ।
भगवत्यास्तु तुष्टयर्थं महातीर्थेषु मानद ॥

—தேவீபாகவதம், 7 ம் ஸ்கந்தம்.—

அம்மரபிலேயே தோன்றிய அரிச்சந்திர அரசன் ஒரு ஸத்யத்தைக் காக்க இராஜ்யத்தையும் இழந்து நண்பர்களையும் பிரிந்து மனைவியையும் மைந்தனையும் அடிமையாக்கி தானும் சேவகனாகி மகனும் மரித்து மயானத்தில் மயங்கியபொழுது சதாக்ஷி என்ற அம்பாளின் அருளால்அத்தகைய ஆபத்து நீங்கியது. மகனும் பிழைத்து அரசாங்கமேற்றான். தசரதசக்ரவர்த்திக்குத் திருக்குமாரனாக அவதரித்த இராமன் கானகம் சென்று வாலியையென்று சுக்ரீவபட்டாபிஷேகம் செய்வித்தான். பிறகு மழைகாலம். ப்ரஸ்ரவணமலையில் தங்கிய பொழுது பலத்த மழை பயங்கர காற்று. ஸீதாபிராட்டியின் நினைவு வந்தது. விரஹம் ஸஹிக்காமல் இலக்குமணனிடம் தான் உயிரையே இழந்து விடுவதாகக் கூறுகிறான். நாரதர் வந்து அவதாரப்ரயோஜனம் இராவணஸம்ஹாரம். அதற்கு அம்பாளின் அருள் வேண்டும். மிகக்கொடியவனாயினும் சிவபக்தனான இராவணனைக் கொல்வது சுலபமல்ல என்று கூறுகிறார். சாரதநவராத்ரி சமயம். நாரதர் நவாஹயக்ஞம் நடத்தி வைக்கிறார். அஷ்டமியன்று அர்த்தராத்ரியில் சிம்மவாஹனத்தில் அம்பாள் ஆவிர்பவித்து ஆயுதங்களைக் கொடுத்து மறைகிறாள். பிறகு ராவணஸம்ஹாரம் நடைபெறுகிறது. இவ்விதம் பல அரசர்கள் ஆபத்து வந்த காலத்தில் அம்பாளை நினைத்து சுகமடைந்தனர் என்று தேவீபாகவதம் கூறுகிறது. ஆகையினால் உலகவாழ்க்கையில் ஈடுபட்ட மிக எளியவன் முதல் அரசன்வரை எல்லோரும் அம்பாளை உபாஸித்து ராஜ்யபோகம்வரை சுகத்தையனுபவிக்கிறார்கள்.

உலகத்தைத் துறந்த சன்யாஸிகளும் மோக்ஷமடைவதற்குக் காரணமான பிரம்ம வித்யையையடைவதற்கு அம்பாள் அனுக்ரஹம் பெறவேண்டும். ஸ்ரீபகவத்பாதாசார்யாள் ஸௌந்தர்யலஹரீ, தேவீபுஜங்கம், த்ரிசதி பாஷ்யம், வர்ணமாலாஸ்தோத்ரம், அபராத க்ஷமாபணம் முதலிய க்ரந்தங்களைச் செய்துள்ளனர். அவைகளை நன்கு பரிசீலனம் செய்து அறிய வேண்டும். அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற மடங்களில் விளங்கும் ஆசார்யர்கள் நவராத்ரீ-பௌர்ணமி வெள்ளி செவ்வாய் நாட்களில் அம்பாள் ஆராதனம் விசேஷமாய்ச் செய்து ஸுவாஸினீ பூஜை, சண்டிஹோமம் முதலியவற்றை மிக விமரிசையுடன் செய்து வருகிறார்கள். ஆகையினால் போகத்தை விரும்பினாலும் மோக்ஷத்தை விரும்பினாலும் அம்பாளை ஆராதிப்பது அவச்யமானது.

यत्रास्ति भोगः नच तत्र मोक्षः यत्रास्ति मोक्षः नच तत्र भोगः । श्रीसुन्दरी सेवनतत्पराणां भोगश्चमोक्षश्च करस्थएव ॥

என்பது சான்றோர் வசனம்,

போகமளிக்கும் தெய்வம் மோக்ஷமளிக்காது. மோக்ஷமளிக்கும் தெய்வம் போகமளிக்காது. அம்பாளை சேவிப்பவர் இரண்டையும் சுலபமாய் அடைவார் என்பது இதன் பொருள்.

மேலும் இந்துமதத்திலுள்ளவர் அனைவரும் ஷண்மதத்தைப் பின்பற்றி ஆறுதெய்வங்களில் ஒன்றை வழிபடுபவராக உள்ளனர். கணேசனை வழிபட்டால் நமது கார்யம் இடையூறின்றி நிறைவேறும், எண்ணம் பயனளிக்கும் என்று அபிஷேகம், அர்ச்சனை முதலியன செய்கிறார்கள். அக்காரியம் நினைத்தபடி நடக்கிறது. அப்பொழுது அந்த சக்தி கணேசனிடம் உள்ளது. மற்ற தெய்வத்தினிடமில்லை என்று நினைக்கிறார்கள். முருகனை வழிபட்டால் நல்ல சந்ததியுண்டாகும். சூரியனை வழிபட்டால் சரீர

ஆரோக்யமேற்படும். இராமனை வழிபட்டால் ஐச்வர்யம் நிலைத்திருக்கும். பரமசிவனை வழிபட்டால் அறிவு வளர்ச்சி ஏற்படும் என்றும் மற்ற தெய்வங்களில் அந்தந்த சக்தி இல்லை என்றும் எண்ணுகின்றனர். கீழ்க்கண்டபடி பயனை யளிக்கும் சக்தி அந்த தெய்வத்தினிடமுள்ளதால் ச்ரத்தை யுடன் பூஜை பாராயணம் முதலியன நடக்கிறது. சக்தி யில்லையானால் ஒருவரும் வழிபடமாட்டார்கள், அப்பொழுது சக்தியைக் கொண்டு தான் தெய்வத்திற்கு பெருமை. ஆகையினாலேயே ஆசார்யாள் ஸௌந்தர்ய லஹரியில்,

"नचेदेवं देवो नखलुकुशल: स्पन्दितुमपि"

சக்தியுடன் இல்லா விட்டால் சிவன் அசையவும் முடியாதவ ராகிறார். தன்னையே அசைக்கமுடியாதவர் பிறருக்கு என்ன பயனளிப்பார். இவ்விதம் பரமசிவனுக்கே ஏற்படும் பொழுது மற்ற தெய்வத்தைப் பற்றி கேட்க வேண்டாம்

ஒரு ஸமயம் மஹிஷ (எருமை) உருவமாக ஓர் அசுரன் உண்டாகிறான். தனது தவ பலத்தினால் தேவர்களை அவரவர் இடத்தை விட்டு விலகவும் கானகங்களில் மறைந்திருக்கவும் செய்கிறான். வெகுநாள் துன்பப்பட்ட தேவர்கள் பிரம்ம லோகம் சென்றனர். பிரம்மதேவன் வரன் ஏதாவது கேட்டால் கொடுக்க முடியுமே தவிர அசுரர்களை அழிக்கத் தன்னால் இயலாதென்று வைகுண்டம் செல்கிறார். அந்த மஹிஷனுடைய பல பராக்ரமத்தை அறிந்த தேவர்கள் தனியாய்ப் போய்ப் பயன் படாதென்று பிரம்மா விஷ்ணு சிவன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும் சேர்ந்து மஹிஷனிடம் சென்று போர் புரிகின்றனர். தொடர்ந்து ஐம்பது நாள் போர் நடக்கிறது, மஹிஷனை விரட்ட முடியவில்லை. கடைசி நாள் மஹிஷன் தனது மாயா சக்தியினால் ஆயிரக்கணக்கான மஹிஷர்களையுண்டு பண்ணி தேவர்களை விரட்டினான். பிரம்மாதி தேவர்களும்

பயந்து தம் இடம் சென்றுர்கள். பிறகு நூற்றுக்கணக்கான வருஷங்கள் அதிகமாக தேவர்களைத் துன்புறுத்தினுன் மஹிஷன். அப்பொழுது கொடுமை தாங்க முடியாதவர்களாக தேவர்கள் மிகக் கவலையுடன் சிந்தையில் அமர்ந்தனர். கொஞ்சகாலம் ஆன பிறகு ஒவ்வொரு தேவர்களின் சரீரத்திலிருந்து ஒளி தனித்தனியாய் வெளிவந்தது. ஒளிகள் அவ்வளவும் சேர்ந்து ஒரு ஸ்த்ரீ உருவத்தை உண்டு பண்ணின. ஆயிரம் கைகளுடன் மலை போல் பயங்கர உருவத்துடன் உண்டானவள் மஹிஷாஸுரமர்தினீ. மஹிஷனை அழித்தாள். பின்பு ஒரு ஸமயம் கௌசிகியாய் ஆவிர்பவித்து ரக்தபீஜன் சும்பன் நிசும்பன் முதலியவர்களையும் அழித்தாள்.

அப்பொழுது அம்பாளிடம் அசுரன் கேட்கிறுன். தேவர்களிடமிருந்து உண்டான சக்தியைக் கொண்டு தானே என்னைக் கொல்கிறுய். உன்னிடம் தனியாக என்ன ஸாமர்த்யம் இருக்கிறது என்று

"अन्यासां बलमाश्रित्य युध्यसे त्वतिमानिनि"

அதற்கு அம்பாள் பதிலளிக்கிறுள். தேவர்கள் உண்டாகும் பொழுது ஒவ்வொரு தேவருக்கும் ஒவ்வொரு சக்தியை நான் கொடுத்திருந்தேன். நான் கொடுத்த சக்தியை இந்த சமயம், உன்னைக் கொல்வதற்கு எனக்களித்தார்கள். உன்னைக் கொன்றவுடன் அவர்களிடம் போய் விட்டது. இப்பொழுது பார் அவ்வளவு சக்திகளும் என்னிடம் லயத்தையடைகின்றன என்று கூறுகிறுள். உடன் ப்ரம்மாணீ முதலிய சக்திகள் அம்பாளின் சரீரத்தில் சேருகின்றன என்பது தேவீமாஹாத்மியம் தேவீபாகவதம் முதலிய க்ரந்தங்களில் கூறப்படுகிறது.

இங்கு தேவர்கள் அனைவராலும் முடியாத கார்யத்தை அம்பாள் செய்தாள் என்றும் தேவர்களனைவருக்கும் சக்தி

யை அம்பாளே கொடுத்தாள் என்றும் நன்குவிளங்குகிறது. எந்த தேவரிடம் எவ்விதமான சக்தி இருந்தாலும் அது அம்பாளுடையதே. அம்பாளிடம் எவ்வித சக்தி, எவ்வளவு சக்தி உள்ளதென்பது வேதமே புரிந்து கொள்ளாதது போல்

पराऽस्यशक्तिः विविधैव श्रूयते ।

பற்பல சக்திகள் உள்ளதாகக் கேட்க்கப்படுகிறது என்று கூறுகிறது. ஆகையினுல் எந்த தேவர்களை வழிபட்டாலும் அவர்களிடமுள்ள சக்தியையே வழிபடுவதாக முடிவதால் ஆஸ்திகரனைவரும் சாக்தர்களே. சைவ — வைஷ்ணவ முதலியவை உட்பிரிவுகள் தான் என்றுவியாஸர் கூறுகிறார்

नविष्णूपासना नित्या नशिवोपासनातथा ।
तस्माच्छाक्ताश्चतेसर्वे नियता शक्त्युपासना ॥

வேதத்திற்கு ஸாரம் காயத்ரீ, அதன் ஸாரம் வ்யாஹ்ருதி. அதன் ஸாரம் ப்ரணவம் அதற்கு மேல் கிடையாது. ப்ரணவத்திற்கு அர்த்தம் கூறும்பொழுது தேவீபாகவதம்

अकारो भगवान् ब्रह्मा ह्युकारो हरिरीश्वरः ।
मकारो भगवान् शंभुः अर्धमात्रा महेश्वरी ॥

அகாரம் பிரம்மா, உகாரம் விஷ்ணு, மகாரம் சிவன், அதற்குமேல் நாதரூபமாயுள்ளது பராசக்தி என்று கூறி இங்கு முன் கூறியவரை விட பின்கூறியவர் உயர்ந்தவர் என்றும் கூறுகிறது.

उत्तरोत्तर भावेन ह्युत्तमत्वं स्मृतं बुधैः ॥

ஆகையினுல் பராசக்தி பிரும்மாதி தேவர்களிலும் மிக உயர்ந்தவள் என்று தெரிகிறது.

ओंकारपंजरशुकीमुपनिषदुद्यानकेलिकल कण्ठीम् ।।

என்று மஹாகவி காளிதாசன் ஓம்காரத்திற்கு உள் பொருள் பராசக்தி என்பதை விளக்குகிருன்.

மேலும் உலக அனுபவத்தில் நடக்கமுடியாதவர்களை சக்தியற்றவர் என்றும் ஒரு கார்யத்தைச் சரிவர செய்து முடிக்காதவர்களை செய்யும் சக்தியில்லை என்றும் சாப்பிட முடியாதவரை ஜீர்ண சக்தியில்லை என்றும் கூறுகிறேம். அவன் சரீர சக்தியால் (பலத்திஞல்) அதை ஸாதித்தான் இவன் புத்தி சக்தியால் (பலத்திஞல்) இதை ஸாதித்தான் என்றும் கூறுகிறேம். இந்த சக்தி ஜடப்பொருளுக்கும் இருக்கிறது. ம்ருதஸஞ்ஜீவிநீ, விசல்யகரணீ இறந்தவனைப் பிழைக்கச் செய்வது—விட்டுப்போன அவயவங்களை ஒன்று சேர்க்கிறது—என்ற சக்திகள் ஔஷதிகளிடமுள்ளதாக இராமயணம் கூறுகிறது. ஒரு பச்சிலையை முகர்ந்தால் ஸர்ப்பவிஷம் தேள்விஷம் போகிறது. மற்றும் எண்ணற்ற ஔஷதங்களில் சக்திகள் உள்ளன. இவ்விதம் சரம் அசரம் என்ற ப்ரம்மாண்டத்தில் சக்தியில்லாத இடமில்லை. கார்யத்தில் உள்ளது காரணத்தில் உள்ளதுதான் என்பது நூல் வெள்ளையாஞல் வஸ்திரம் வெள்ளை சிவப்பாஞல் சிவப்பு என்பதிலிருந்து விளங்குகிறது. ஆகையிஞல் உலகம் முழுவதும் பரவிய சக்தி காரணத்தில் இருக்கவேண்டும். பற்பல சக்தியுள்ளவள் பராசக்தி என்பது சாஸ்திரத்திஞலும் அனுபவத்திஞலும் நன்கு அறிகிறேம். மேலும் ச்வேதாச்வதரம் என்ற உபநிஷத் கூறுகிறது. ஒரு சமயம் பலமஹரிஷிகள் ஒன்று சேர்ந்து உலகிற்குக்காரணம் எது என்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொன்றைக் காரணமாகக் கூறினர். பல காரணம் இருக்க முடியாததால் மறுபடி எல்லோரும் சேர்ந்து தியானத்தில் அமர்ந்தனர். ஒரே விதமாக த்யானத்தில் தோன்றியது, தனது ஸத்வம் முதலிய குணங்களுடன் கூடிய பராசக்தியே உலகத்திற்குக் காரணம் என்று.

तेध्यानयोगानुगता अपश्यन् देवात्मशक्तिस्वगुणैर्निगूढाम् ।

இவ்விதம் ஜதத் காரணமான பரம்பொருள் பராசக்தி என்பது நன்கு விளங்குகிறது.

மேலும் ஒருவன் ஒரு தேவதையை வழிபட இரண்டு மூன்று மணி நேரம் நின்று கொண்டு அபிஷேகம், அலங்காரம் அர்ச்சனை செய்கிருன். அவனைப் பார்ப்பவர்கள் மூன்று மணி நேரம் நின்று கொண்டு செய்கிருன் அந்த சக்தி நமக்கில்லையே என நினைக்கிருர்கள். சரீர தாரண சக்தியில்லையானுல் ஒரு நிமிஷம் நிற்க முடியாது. அது போல் மணிக்கணக்கிலோ நாள் கணக்கிலோ — மாதம் — வருஷம் த்யானத்தில் அமர்ந்தவர் அசைவில்லாமல் மனதையும் அடக்கி தியானம் செய்கிருர். அவ்விதம் சரீரத்தையும் மனத்தையும் கட்டுப்படுத்த சக்தியே காரணம்.

இவ்விதம் பராசக்தியின் அருளால் சக்தியைப் பெற்று மற்ற தேவர்களை பூஜிப்பதோ தியானிப்பதோ செய்து பயனையடைவதைவிட பராசக்தியையே பூஜித்து தியானம் செய்து விரும்பிய பயனைப் பெறுவானுயில்

तद्धेतोरेवतद्धेतुत्वेमध्येकिंतेन ।

என்ற நியாயப்படி மிக புத்திசாலியாவான். இலௌகிகத்தில் ஒரு உதாரணம். தன் பிள்ளைக்கு பாங்கில் உத்யோகம் பெற கரஸ்பாண்டண்டைப் பார்க்க வேண்டும். அதற்கு தனது ஸ்னேஹிதனிடம் சென்று கரஸ்பாண்டண்டை அறிமுகப்படுத்து என்று கூறினுன். அப்பொழுது கரஸ்பாண்டண்டே தனக்கு நெருங்கிய பந்துக்கள் என்பது புரிய வந்தது. பிறகு ஸ்னேஹிதனை அறிமுகப்படுத்த அபேக்ஷிப்பானு? நேரிலேயே தனது கார்யத்தை சாதித்துக் கொள்ளலாமல்லவா. அது போல் பராசக்தியின் அருளால் மற்ற தேவர்களை வழிபடும் சக்தியுண்டாகி அவர்களை வழிபட்டு பயனையடைவதைவிட அப்பயனை அம்பாளை வழி

பட்டே அடைவானுகில் அவனை புத்திசாலி என்று தானே கருத வேண்டும்.

மேலும் வேதத்திற்கும் வேள்விக்கும் வேதியர் மிக நெருங்கியவர். வேதியருக்கு த்விஜன் என்று பெயர். இப்பெயர் காயத்ரி உபதேசத்தினுல் ஏற்படுகிறது. த்விஜன் என்ருல் இருபிறப்பாளன் என்று பொருள். முதல் பிறப்பில் தாய் நன்கு புரிகிறது. இரண்டாவது பிறப்பில் தாய் நமக்குப் புரியவில்லை.

तत्रास्य माता सावित्री पितात्वाचार्यउच्यते ॥

என்று காயத்ரீதேவியே இரண்டாவது பிறப்பில் தாய் என்று சாஸ்திரம் கூறுகிறது. காயத்ரீ உபதேசமான பிறகு எக்காரணத்தினுலும் காயத்ரியை விடக்கூடாது. தீட்டு வந்தால் மற்ற கார்யங்கள் செய்யக்கூடாது. ஆனுல் காயத்ரியை மட்டும் ஜபிக்க வேண்டும். காயதரீ ஜபம் செய்யாமல் மற்ற பூஜை ஜபம்-த்யானம்-ஹோமம் எது செய்தாலும் பயனில்லை— மற்ற எந்த காரியம் செய்யாவிட்டாலும் காயத்ரியை மட்டும் ஜபித்து வந்தால் த்விஜன் என்ற தன்மை போவதில்லை. பதிதன் ஆகமாட்டான் காயத்ரியை விட்டு மற்ற கார்யங்களைச் செய்வது வஸ்திரமில்லாமல் அலங்காரம் செய்து கொள்வதுபோல் ஆகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. அத்தகைய காயத்ரீ மந்திரத்திற்கு பொருளாய் விளங்குபவள் சூர்யமண்டலத்தில் ஐந்து தலைகளுடனும் பத்துக் கைகளுடனும் கைகளில் ஆயுதங்களுடனும் சந்திரகலை மூன்றுகள் இவைகளுடன் பிரகாசிக்கின்ற பராசக்தி; இவளை காலையில் காயத்ரீ என்றும் மத்யாஹ்னத்தில் ஸாவித்ரீ என்றும் சாயங்காலத்தில் ஸரஸ்வதீ என்றும் உபாஸிக்க வேண்டும். இந்த தேவியை வழிபடும் தேசத்தில் தீயின் பாதையிராது, துர்பிக்ஷமிராது, நவக்ரஹங்கள் பீடிக்காது என்று மஹாபாரதம் கூறுகிறது.

ஒரு சமயம் நூறு வருஷ காலம் மழை இல்லாமல் கொடிய பஞ்சம் ஏற்பட கௌதம மஹரிஷி காயத்ரீ தேவியை பூஜித்து அவள் கொடுத்த பூர்ணபாத்திரத்தினுல் ஜனங்களனைவரையும் காப்பாற்றினுர் என்று தேவீ பாகவதம் கூறுகிறது.

அனைவரும் பெரும்பாலும் விரும்புவது பொருள்—கல்வி. சத்ருஜயம். இம்மூன்றையும்:பராசக்தியே லக்ஷ்மியாக பொருளையும் ஸரஸ்வதியாக கல்வியையும், துர்கையாக சத்ரு ஜயத்தையும் தேவியே அளிக்கிருள். அவளே மூவுலகிற்கும் காரணம்.

लक्ष्मी प्रदान समये नवविद्रुमाथां विद्या प्रदान समये शरदिन्दुशूभ्रां ।
विद्वेषि वर्गविजयेचतमालनीलां देवींत्रिलोक जननीं शरणं प्रपद्ये ॥

"தனம்தரும் கல்விதரும் ஒரு நாளுந்தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும்தரும் நெஞ்சில்வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாந்தரு மன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே"

என்பது அபிராமிபட்டரின் அருள்வாக்கு.

ஸ்ரீபரமசிவனின் அவதாரமாகிய பகவத் பாதாசாரியர்கள் அம்பாளைப் பலவிதமாக துதித்து தத்வங்களையும் பலவாருய்க் காண்பித்து பூர்த்தி செய்யும்பொழுது ஸௌந்தர்யலஹரியில் நான் செய்த துதி எனது அல்ல. நான் ஒரு கருவி, நீயே எனது வாக்கிலிருந்து துதித்துக் கொண்டாய் அதுவும் என் வாய் மூலம் வந்ததால் மிகக் குறைவு ஏற்பட்டது. உலகிற்கெல்லாம் ஒளியைக் கொடுக்கும் சூரியனுக்கு கற்பூரம் காட்டுவது போலும் அமுதமயமான கிரணங்களை வாரி வழங்கும் சந்திரனுக்கு சந்திர காந்தக் கல்லில் சந்திரகிரணம் பட்டு வரும் ஜலத்தால் அர்க்யம் விடுவதும், சமுத்திரஸ்னனம் செய்த பிறகு

அதில் கையில் ஜலமெடுத்து அர்க்யம் விடுவதும், எவ்விதமோ அதுபோல் உனது வாக்கைக் கொண்டே செய்தேன் என்று மிகப் பணிவைக் காட்டுகிறார்

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधिः
सुधासूतेश्चन्द्रोपल जललवैरर्घ्यरचना ।
स्वकीयैरंभोभिस्सलिलनिधिसौहित्यकरणं
त्वदियायिर्वाग्भिस्तव जननि वाचांस्तुतिरियम् ॥

தேவீ புஜங்கம் என்ற நூலில் அம்பாளின் அற்புத லீலைகளையும் உபநிஷத்துக்களின் ஸாரமாய் விளங்குபவள் பராசக்தியே என்பதையும் விளக்கி கடைசியில் விநயத்தைக் காண்பிக்கும் பொழுது. ஏ தாயே உனது எல்லையற்ற மஹிமையையும் எனது அற்ப அறிவையும் ஆலோசிக்காமல் அன்பின் மிகுதியால் ஏதோ கொஞ்சம் சொல்லப்பட்டது. குழந்தையின் விளையாட்டுத்தனமான இந்த புலம்பலை நீ ஏற்றுக் கொள்ளவேண்டும்.

इतिप्रेमभारेण किंचिन्मयोक्तं नबुध्वैवतत्वं मदीयं त्वदीयम् ।
विनोदायबालस्य मौर्ख्यंहिमातः तदेतत्प्रलापस्तुतिं मे गृहाण ॥

ஸர்வக்ஞர்களான ஆசார்யாள் அம்பாளிடம் எவ்விதம் பக்தியைச் செலுத்துகிறார்கள் என்பதை அறிந்து நாம் ஒவ்வொருவரும் நமக்குத் தந்த பகுத்தறிவை வீண் செய்யாமல் பெரியோர்களிடம் அறிவாளிகளிடம் சென்று சாஸ்திர ஸித்தாந்தத்தை நன்கு புரிந்து கொண்டு பிறரைக்கண்டு ஏமாறாமல்

गतानुगति गोलोकः नलोकः पारमार्थिकः ॥

ஒருவர் ஒரு வழியில் சென்றால் அதைப்பற்றி ஆராய்ந்து தீர்மானிக்காமல் பின் தொடருவது ஸாதாரண மனிதன் ஸ்வபாவம். நல்ல புத்திசாலி பரமார்த்தத்தை அறிந்து செய்பவன் மிக அரிது என்ற வசனத்தில் கூறியபடி அனைவரும் அரிதான மனிதனாக ஆகவேண்டும்.

यस्येदं जन्मपाश्चात्यं यो भवेच्छंकरः स्वयम् ।
तस्यैषा लभ्यते विद्या श्रीमत्पंचदशाक्षरी ॥

எவருக்கு கடைசி ஜன்மாவோ எவர் சிவனின் அம்சம் பெற்றவரோ அவரே அம்பாள் அருளுக்குப் பாத்ரமாவார் என்று கூறப்படுகிறது. அபரிமிதமான மஹிமை வாய்ந்த அம்பாளே அனைவரையும காச்க வேண்டும் என்று பிரார்த்தனையுடன் இதனை முடிக்கிறேன்.

—சிவம்—

உ

சிவமயம்

ஸ்தோத்ர கமலாகரம்

நமது சபையின் 1973, 74, 75 ஆவது ஆண்டு ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர்களில் உள்ள ஸ்தோத்ரபாகங்களை மட்டும் **"ஸ்தோத்ர கமலாகரம்"** என்னும் பெயரில் தனி நூலாக வெளியிட்டுள்ளோம். ஆதி சங்கர பகவத் பாதாசார்யர்கள், ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் மற்றும் அருளாளர்கள் அருளிச் செய்த ஸ்தோத்ரங்கள் ஆகியவை 28 ஸ்தோத்ரங்கள் இதுவரை மூன்று பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆஸ்திகர் இல்லத்திலும் இருக்க வேண்டிய சிறந்த பொக்கிஷம்.

	விலை	தபால் செலவு
முதல் பாகம்	**1-50**	**0 10**
இரண்டாம் பாகம்	**1-00**	**0 10**
மூன்றும் பாகம்	**2-25**	**0 10**

மூன்று பாகங்களையும் ஒரே சமயத்தில் நம்மிடமிருந்து வாங்குபவர்க்குச் சலுகை விலை ரூ 4.00 தபால் செலவு 25 காசுகள்.

சிவநாம மஹிமை

திருவிசநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் அருளிச் செய்த **ஆக்யா ஷஷ்டி** என்னும் ஸம்ஸ்க்ருத நூலின் தமிழாக்கம். விலை 60 காசுகள் தபால் செலவு 10 காசுகள்

பதிப்பாசிரியர் :

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

சிவபுராண ஞான பூஜகர்

5, டெலிபோஸ்ட் காலனி : குறுக்குத்தெரு

மேலமாம்பலம் — சென்னை-33.

கைவசமுள்ள
நமது அரிய பிரசுரங்கள்

1.	ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர்	1968	—	1 00
2.	,,	1969	—	1 00
3.	,,	1970	—	2 50
4.	,,	1971	—	2 50
5.	,,	1972	—	2 50
6.	,,	1973	—	2 50
7.	,,	1974	—	2 50
8.	,,	1975	—	3 00

சலுகை விலை :- ரூபாய் 13/– நன்கொடையாக அனுப்பும் நேயர்களுக்கு மேற்கண்ட 8 மலர்களும் கைவசமுள்ள இரண்டொரு இலவச பிரசார விலை வெளியீடுகளும் சேர்த்து அனுப்பி வைக்கப்படும்.

9. * விபூதியும் ருத்ராக்ஷமும் (பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் எழுதியது) இரண்டாம் பதிப்பு — (அச்சில்)

10. ஸ்ரீ சங்கர பகவத்பாத விஜயம் (சிவோத்கர்ஷ வர்ஷக பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகள் எழுதியது) — ரூ. 0 60

11. அருள்மொழிக் கோவை — ரூ. 0 50

12. சிவ நாம மஹிமை — ரூ. 0 60

ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர்களை தொடர்ச்சியாக வாங்கும் நேயர்கள் * இக்குறியிட்ட நூல்களை வாங்க வேண்டியதில்லை.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
மேலமாம்பலம், சென்னை–600033.

Elango Achukoodam, 114-B, R H Road Madras-4